**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30.11.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் நபார்டு வங்கியும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும்

தேசிய வேளாண் வளர்ச்சி வங்கியின் தலைமை பொது மேலாளர், பொது மேலாளர்கள் மற்றும் மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் உட்பட 28 பேர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இரண்டு நாள் (28.11.2022 மற்றும் 29.11.2022) கண்டுநர் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். வெ.கீதாலட்சுமி அவர்கள் வரவேற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தில் செயல்படுத்தப்பட்ட இயற்கை வள மேலாண்மை, விவசாய உற்பத்தித்திறன் அதிகரிப்பு, நிலைத்தன்மை, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், விவசாய மற்றும் கிராமாப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு, கல்லூரிகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற பல்வேறு செயல் திட்டங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற உதவியது பற்றி 28.11.2022 அன்று நடைபெற்ற நபார்டு வங்கி கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் திரு. டி. வெங்கடகிருஷ்ணா அவர்கள் கலந்து கொண்டார். அவர்கள் நீர்வடி உப திட்டம் மற்றும் திறனாய்வு பயிற்சியின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்படுவதில் முனைப்பு காட்டுவதாக கூறினார். மேலும், அண்மையில் நடைபெற்ற மாநில அளவிலான உழவர் தினவிழாவில் 27,000 விவசாயிகள் மற்றும் 4200 மாணவர்கள் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் வெற்றிகரமாக பங்கு பெற்றதை நினைவு கூர்ந்தார்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு துறைகளில்

நபார்டு வங்கியின் நிதியுதவிடன் செயல்படுத்தபடும் கீழ்க்கண்ட செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

- பழங்குடியினருக்கு ஆடு வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, உரம் உற்பத்தி, பட்டு வளர்ப்பு, வேளாண் சுற்றச்சூழல் அமைப்பு பகுப்பாய்வு, மீன்வளம், ஹைட்ரோபோனிக் தீவன உற்பத்தி, ஒருங்கிணைந்த பண்ணையம், நெல் வயலில் மீன் வளர்ப்பு, தொழில்முனைவு மற்றும் திறன் மேம்பாடு மற்றும் மதிப்பு கூட்டல் திட்டம்
- தொழில்முனைவு மற்றும் திறன் மேம்பாடு திட்டம்
- நிலக்கடலைக்கான சமச்சீர் ஊட்டச்சத்தை அடைய நானோ.:.பைபர் அடிப்படையிலான ஊட்டச்சத்து விநியோகத்தை மேம்படுத்துதல் போன்ற திட்டத்தின் மூலம் எலக்ட்ரோஸ் பின்னிங் மோனோ ஆக்சியல் முறை கையாளப்பட்டு பல ஊட்டச்சத்து மற்றும் மக்கும் பாலிமா் ஆகியவற்றின் கலவையால் நானோ.:.பைபர் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.
- தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள 18 இடங்களில் கருப்பு கவுனியில் வயல்வெளி ஆய்வு மற்றும் விவசாயிகளுக்கு கவுனி நெல் மற்றும் அதன் விதை உற்பத்தி குறித்து ஆறு ஒரு நாள் பயிற்சிகள் நடத்தப்பட்டு 175 விவசாயிகள் பயனடைந்தனர்.
- பல்வேறு மாநாடுகள், பணிமனைகளுக்கு பல நிதியளித்துள்ளது.
- மும்பையிலுள்ள நபார்டு தலைமை அலுவலகம், மழைநீா் மற்றும் மழை மற்றும் நீா் சேமிப்பு தொட்டி தமிழ்நாட்டில் உள்ள தொட்டி அடுக்கு அணுகுமுறையை பயன்படுத்தி செயல்திறனை மறுபரிசீலனை செய்தல் மற்றும் டேங்க் ஸ்டோரேஜ் பேட்டா்ன் ஆராய்ச்சித் திட்டத்தின் வாயிலாக 28 லட்சத்தில் நிதியளித்தததது.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமானது சந்தை சார்ந்த வணிகத்திட்டம், விவசாய செயல்முறைகள், அறுவடைசார் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை இணைப்புகள் ஆகியவற்றின் வழிகாட்டுதலுக்கான உழவா் உற்பத்தியாளா் அமைப்புடனான அதன் தொடா்பை வலுப்பபடுத்துவதற்கான கொள்கையை உருவாக்கியுள்ளளது.
- வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நவம்பா் 25 அன்று நடைபெற்ற 86 வது வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலா்கள் மாநாட்டில் ஐந்து உழவா் உற்பத்தியின் அமைப்புகளுடன், சமீபத்தில் புரிந்துணா்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மறுஆய்வுக்காக ஒரு கட்டமைக்கப்பட்ட கூட்டத்தை நபார்டு பரிசீலிக்க வேண்டும்.

கடந்த இருபது ஆண்டுகளில் நபார்டு வங்கியில் இருந்து பெரும் நிதியுதவியானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நானோ தொழில்நுட்பம் மற்றும் மேம்பாட்டு மையத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி மூலம் பெரும்அளவில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

- பண்ணை துறை ஊக்குவிப்பு நிதி
- தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதற்கான திறன் மேம்பாடு
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதி
- உழவர் உற்பத்தியாளர் அமைப்பு உறுப்பினர்களை சந்தை மற்றும் செயலாக்க அலகுகளை பார்வையிட ஏற்பாடு செய்தல்
- வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாடுகளை உள்ளடக்கிய பல்வேறு குறைகள் மற்றும் கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ளது. விவசாய வளர்ச்சியின் சமூகப் பொருளாதார அம்சங்களில் கொள்கை சார்ந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இறுதியாக, முனைவர் கே. இன்கரசல், பொது மேலாளர் மற்றும் திருமதி. என். நீரஜா, பொது மேலாளர், நபார்டு வங்கி அவர்களை வரவேற்றதுடன், இந்த இரண்டு நாள் பயணத்தின் நோக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் ஆராய்ச்சி இயக்குநர், விரிவாக்கக் கல்வி இயக்குநர், பேராசிரியர் மற்றும் தலைவர், பயிற்சித்துறை, ஆகியோர் இந்நிகழ்வினை ஒருங்கிணைத்தார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**